1996 ஆகஸ்ட் 20]

இணைப்பு-I

(43-ஆம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.)

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை
கொள்கை விளக்கக் குறிப்பு-1996-97
கோரிக்கை எண் 28

கொள்கை விளக்கக் குறிப்பு

அத்தியாயம்-1

தொழில் உறவுகள்

நாட்டின் தொழில் அமைதியைக் காத்து, சுமுகமான தொழில் உறவினை நிலை நாட்டவும், தொழிலாளர்களின் நியாயமான உரிமைகள் பாதுகாக்கப்பட்டு அவர்களது குறைபாடுகள் அனைத்தும் தொழிலாளர் நலத் துறையின் மூலம் தீர்வு காணப்படவும், மேலும் வேலை நிறுத்தங்களற்ற ஒரு சுமுகமான தொழில் உறவு நிலவும் சூழ்நிலையில் தொழிலாளர்கள் மற்றும் நிர்வாகத்தினர் தங்களது கூட்டு முயற்சி மற்றும் உழைப்பின் சக்தியை உணர்ந்து, நாட்டு நலனைப் பெரிதெனக் கொண்டு உற்பத்தித் திறனைப் பெருக்க உதவுவதற்கும் தொழிலாளர் துறை பெரிதும் பாடுபட்டு வருகிறது. வேலை நிறுத்தம் மற்றும் கதவடைப்பினால் வீணான மனித உழைப்பு நாட்கள் (mandays lost) பற்றிய விவரங்கள் இணைப்புகள் *1–2ல்* கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த அரசு சீரிய முயற்சிகளை மேற்கொண்டு வீணான மனித உழைப்பு நாட்கள் மேலும் குறைய தீவிர முயற்சிகளை மேற்கொள்ளும். இவ்வரசு தொழிலாளர்களின் நலனையும் தொழில் உறவினையும் காப்பதில் உறுதி கொண்டுள்ளது. இதற்காக பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்கள், ஒப்பந்தங்கள், மற்றும் தீர்ப்புகள் போன்றவற்றை அமுல்படுத்த சீரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

.1.1 தீர்த்து வைக்கப்பட்ட முக்கிய தொழில் தகராறுகள்:

ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் தொழில் தகராறுகளைத் தீர்த்து வைப்பதில் இந்த அரசு முனைப்பாக உள்ளது. *1995-ம்* ஆண்டில் எழுப்பப்பட்ட *9,027* தொழிற் தகராறுகளில், *8,782* வழக்குகள் சமரச அலுவலர்களால் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் குறிப்பிடத்தக்க சில ஒப்பந்தங்களின் விவரங்கள் இணைப்பு *3-ல்* கொடுக்கப்பட்டுள்ளன.